**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# மாற்றுப்பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 2019

**(எண் 40/2019)**

**(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)**

# THE TRANSGENDER PERSONS (PROTECTION OF RIGHTS) ACT, 2019

**(No. 40 of 2019)**

**(As on 31st October, 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# மாற்றுப்பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 2019

(எண் 40/2019)

# THE TRANSGENDER PERSONS (PROTECTION OF RIGHTS) ACT, 2019

(No. 40 of 2019)

# PREFACE

This edition of the Transgender Persons (Protection of Rights) Act, 2019 (No. 40 of 2019) as on 31st October 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 17th July, 2023 on Pages from 279 to 297.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
17th July, 2023. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள மாற்றுப்பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 2019 (எண் 40/2019) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, ஜூலை 17 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின், சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 279 முதல் 297 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு , அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
17, ஜூலை 2023. இந்திய அரசு செயலாளர்.

# THE TRANSGENDER PERSONS (PROTECTION OF RIGHTS) ACT, 2019

## (No.40/2019)

## CONTENTS

Sections Pages


**CHAPTER I**

**PRELIMINARY**

1. **Short title, extent and commencement.** 1

2. **Definitions**. 1

**CHAPTER II**

**PROHIBITION AGAINST DISCRIMINATION**

3. **Prohibition against discrimination.** 3

**CHAPTER III**

**RECOGNITION OF IDENTITY OF TRANSGENDER PERSONS**

4. **Recognition of identity of transgender person.** 4

5. **Application for certificate of identity.** 4

6. **Issue of certificate of identity.** 4

7. **Change in gender.** 5

**CHAPTER IV**

**WELFARE MEASURES BY GOVERMENT**

8. **Obligation of appropriate Government.** 5

**CHAPTER V**

**OBLIGATION OF ESTABLISHMENTS AND OTHER PERSONS**

9. **Non-discrimination in employment.** 6

# மாற்றுப்பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 2019

**(எண் 40/2019)**

## பொருளடக்கம்

**பிரிவுகள்** **பக்கங்கள்**


**அத்தியாயம் I**

**முன்னுரை**

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். 1

2. பொருள் வரையறைகள். 1

**அத்தியாயம் II**

**வேற்றுமை காட்டுவதற்கு எதிராகத் தடையுறுத்தம்**

3. வேற்றுமை காட்டுவதற்கு எதிராகத் தடையுறுத்தம். 3

**அத்தியாயம் III**

**மாற்றுப்பாலினத்தவரின் பாலின அடையாளத்தை ஏற்பளித்தல்**

4. மாற்றுப்பாலினத்தவரின் பாலின அடையாளத்தை ஏற்பளித்தல். 4

5. பாலின அடையாள உறுதிச்சான்றுக்கான விண்ணப்பம். 4

6. பாலின அடையாள உறுதிச்சான்று வழங்குதல். 4

7. பாலினத்தில் மாற்றம். 5

**அத்தியாயம் IV**

**அரசால் எடுக்கப்படும் நலப்பாட்டு நடவடிக்கைகள்**

8. உரிய அரசுக்குள் கடமைப்பாடு. 5

**அத்தியாயம் V**

**நிறுவனங்களுக்கும் பிற நபர்களுக்குமுள்ள கடமைப்பாடு**

9. வேலையமர்த்தத்தில் வேற்றுமை காட்டாமை. 6

10. **Obligations of establishments.** 6

11. **Grievance redressal mechanism.** 6

12. **Right of residence.** 6


## CHAPTER VI

## EDUCATION, SOCIAL SECURITY AND HEALTH OF TRANSGENDER PERSONS


13. **Obligation of educational institutions to provide inclusive education to transgender persons.** 7

14. **Vocational training and self-employment.** 7

15. **Healthcare facilities.** 7


## CHAPTER VII

## NATIONAL COUNCIL FOR TRANGENDER PERSONS


16. **National Council for Transgender Persons.** 8

17. **Functions of Council.** 9


## CHAPTER VIII

## OFFENCES AND PENALTIES


18. **Offences and penalties.** 10


## CHAPTER IX

## MISCELLANEOUS


19. **Grants by Central Government.** 11

20. **Act not in derogation of any other law.** 11

21. **Protection of action taken in good faith.** 11

22. **Power of appropriate Government to make rules.** 11

23. **Power to remove difficulties.** 13

10. நிறுவனங்களுக்குள்ள கடமைப்பாடுகள். 6

11. குறைதீர்த்தல் இயங்கமைவு. 6

12. உறைவிடத்திற்கான உரிமை. 6

## அத்தியாயம் VI

## மாற்றுப்பாலினத்தவருக்குக் கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு

13. மாற்றுப்பாலினத்தவருக்கு உள்ளடக்கிய கல்விக்கு வகைசெய்வதற்கு கல்வி நிறுவனங்களின் கடமைப்பாடு. 7

14. உறுதொழில் பயிற்சி மற்றும் சுயவேலைவாய்ப்பு. 7

15. நல்வாழ்வு பாதுகாப்பு வசதிகள். 7

## அத்தியாயம் VII

## மாற்றுப்பாலினத்தவருக்கான தேசிய மன்றம்

16. மாற்றுப்பாலினத்தவருக்கான தேசிய மன்றம். 8

17. மன்றத்தின் செயற்பணிகள். 9

## அத்தியாயம் VIII

## குற்றச்செயல்களும் தண்டனைகளும்

18. குற்றச்செயல்களும் தண்டனைகளும். 10

## அத்தியாயம் IX

## பல்வகை

19. மைய அரசால் வழங்கப்படும் மானியங்கள். 11

20. சட்டம் பிற சட்டம் எதனையும் திறக்குறைவு செல்வதில்லை. 11

21. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. 11

22. விதிகள் செய்வதற்கு உரிய அரசுக்குள்ள அதிகாரம். 11

23. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். 13

# THE TRANSGENDER PERSONS (PROTECTION OF RIGHTS) ACT, 2019

**(No. 40 of 2019)**

[5th *December,* 2019.]

An Act to provide for protection of rights of transgender persons and their welfare and for matters connected therewith and incidental thereto.

BE it enacted by Parliament in the Seventieth Year of the Republic of India as follows:—

## CHAPTER I

### PRELIMINARY

Short title, extent and commencement.

**1.** (1) This Act may be called the Transgender Persons (Protection of Rights) Act, 2019.

(2) It extends to the whole of India.

(3) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

Definitions.

**2.** In this Act, unless the context otherwise requires,—

(a) "appropriate Government" means, —

(i) in relation to the Central Government or any establishment, wholly or substantially, financed by that Government, the Central Government;

(ii) in relation to a State Government or any establishment, wholly or substantially financed by that Government, or any local authority, the State Government;

(b) "establishment" means—

(i) any body or authority established by or under a Central Act or a State Act or an authority or a body owned or controlled or aided by the Government or a local authority, or a Government company as defined in section 2 of the Companies Act, 2013, and includes a Department of the Government; or 18/2013.

---

1. 10th January, 2020, *vide* notification No. S.O. 135(E), dated 10th January, 2020, *see* Gazette of India, Extraordinary, Part II, sec. 2(*ii*).

# மாற்றுப்பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 2019

**(எண் 40/2019)**

[2019, டிசம்பர் 5]

மாற்றுப்பாலினத்தவர் உரிமைகளின் பாதுகாப்பிற்காகவும் அவர்கள் நலனுக்காகவும் வகைசெய்வதற்கும், அவற்றுடன் தொடர்புடைய அல்லது அவற்றுக்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்காகவுமான– தொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் எழுபதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், மாற்றுப்பாலினத்தவர் (உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 2019 என்று வழங்கப்பெறும்.

(2) இது இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(அ) ''உரிய அரசு'' என்பது, –

(i) மைய அரசு அல்லது அந்த அரசால், முழுவதுமாகவோ பெரும்பகுதியாகவோ நிதியுதவப்படுகிற, நிறுவனம் எதன் தொடர்பாகவும், மைய அரசு என்றும்;

(ii) ஒரு மாநில அரசு அல்லது அந்த அரசால் முழுவதுமாகவோ பெரும்பகுதியாகவோ நிதியுதவப்படுகிற, நிறுவனம் எதனின், அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதன் தொடர்பாகவும், மாநில அரசு என்றும் பொருள்படும்;

(ஆ) ''நிறுவனம்'' என்பது,–

(i) ஒரு மையச் சட்டத்தாலோ அல்லது ஒரு மாநிலச் சட்டத்தாலோ அல்லது அவற்றின் வழியாலோ நிறுவப்பட்ட குழுமம் அல்லது அதிகாரஅமைப்பு எதுவும் என்று அல்லது அரசுக்கு அல்லது ஓர் உள்ளாட்சி அதிகாரஅமைப்பிற்குச் சொந்தமான அல்லது அதனால் கட்டாள்கை செய்யப்படும் அல்லது நிதியுதவப்படும் அதிகாரஅமைப்பு அல்லது ஒரு குழுமம் என்று அல்லது நிறுமங்கள்
18/2013. சட்டம், 2013 இன் 2 ஆம் பிரிவில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஓர் அரசு நிறுமம் என்று பொருள்படும் மற்றும் ஓர் அரசுத் துறையை உள்ளடக்கும்; அல்லது

1. 2020, சனவரி 10, 2020, சனவரி 10 தேதியிட்ட, அறிவிக்கை எண். எஸ்.ஓ.135 (E) ஐக் காண்க, இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II இல், பிரிவு 3 (ii ) ஐப் பார்க்க.

(ii) any company or body corporate or association or body of individuals, firm, cooperative or other society, association, trust, agency, institution;

(c) "family" means a group of people related by blood or marriage or by adoption made in accordance with law;

(d) "inclusive education" means a system of education wherein transgender students learn together with other students without fear of discrimination, neglect, harassment or intimidation and the system of teaching and learning is suitably adapted to meet the learning needs of such students;

(e) "institution" means an institution, whether public or private, for the reception, care, protection, education, training or any other service of transgender persons;

(f) "local authority" means the municipal corporation or Municipality or Panchayat or any other local body constituted under any law for the time being in force for providing municipal services or basic services, as the case may be, in respect of areas under its jurisdiction;

(g) "National Council" means the National Council for Transgender Persons established under section 16;

(h) "notification" means a notification published in the Official Gazette;

(i) "person with intersex variations" means a person who at birth shows variation in his or her primary sexual characteristics, external genitalia, chromosomes or hormones from normative standard of male or female body;

(j) "prescribed" means prescribed by rules made by the appropriate Government under this Act; and

(ii) நிறுமம் அல்லது கூட்டுருமக் குழுமம் அல்லது தனிநபர்களின் கழகம் அல்லது தனிநபர்களின் குழுமம் எதுவும், நிறுவகம், கூட்டுறவு அல்லது பிற சங்கம், கழகம், பொறுப்புக்கட்டளை, முகமை, நிலையம் என்று பொருள்படும்;

(இ) ''குடும்பம்'' என்பது, குருதி அல்லது திருமண உறவின் வழி அல்லது சட்டப்படிச் செய்யப்பட்ட மகவேற்பின் வழி தொடர்புடைய மக்கள் தொகுதி என்று பொருள்படும்;

(ஈ) ''உள்ளடக்கிய கல்வி'' என்பது, மாற்றுப்பாலினத்து மாணவர்கள் பிற மாணவர்களுடன் ஒன்று சேர்ந்து, வேற்றுமைகாட்டப்படும், புறக்கணிக்கப்படும், தொல்லை கொடுக்கப்படும் அல்லது மிரட்டப்படும் அச்சமின்றிக் கற்கும் ஒரு கல்வி முறை என்றும்; மற்றும் கல்வி கற்பிக்கும் மற்றும் கற்கும் முறையானது, அத்தகைய மாணவர்களுக்குக் கற்பதற்கான தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் பொருத்தமுடையதாக மாற்றியமைக்கப்பட்டிருப்பதான அந்தக் கல்வி முறை என்றும் பொருள்படும்;

(உ) ''நிலையம்'' என்பது, மாற்றுப்பாலினத்தவருக்கு மதிப்பேற்பு அளித்தல், அன்புகாட்டல், பாதுகாத்தல், கல்விபுகட்டல், பயிற்சியளித்தல் அல்லது பிற சேவை எதுவும் செய்து வருவதற்கான ஒரு பொதுத் துறையாகவோ அல்லது தனியார் துறையாகவோ உள்ள ஒரு நிலையம் என்று பொருள்படும்;

(ஊ) ''உள்ளாட்சி அதிகாரஅமைப்பு'' என்பது, மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது ஊராட்சி அல்லது தன் அதிகாரவரம்பின் கீழுள்ள பகுதிகள் பொறுத்து நேர்வுக்கேற்ப, நகராட்சிப் பணிகளை அல்லது அடிப்படைப் பணிகளை வழங்குவதற்காக அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அமைக்கப்பட்ட பிற உள்ளாட்சிக் குழுமம் எதுவும் என்று பொருள்படும்;

(எ) ''தேசிய மன்றம்'' என்பது, **16** ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட மாற்றுப்பாலினத்தவருக்கான தேசிய மன்றம் என்று பொருள்படும்;

(ஏ) ''அறிவிக்கை'' என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(ஐ) ''இருபாலின மாறுபாடுடைய நபர்'' என்பது, எந்த ஒரு நபர் அவனுடைய அல்லது அவளுடைய தொடக்கநிலைப் பாலினப் பண்புக்கூறுகள், வெளிப்புற இனப்பெருக்க உறுப்புகள், உயிரினக்கூறுகள் அல்லது இயக்குநீர் (ஹார்மோன்) இவற்றில் ஆண்பாலுக்குரிய அல்லது பெண்பாலுக்குரிய உடலமைப்பின் இயல்பான பொது நிலையில் இருந்து மாறுபட்டுத் தோன்றுகிறாரோ அந்த நபர் என்று பொருள்படும்;

(ஒ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி உரிய அரசால் செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்; மற்றும்

(k) "transgender person" means a person whose gender does not match with the gender assigned to that person at birth and includes trans-man or trans-woman (whether or not such person has undergone Sex Reassignment Surgery or hormone therapy or laser therapy or such other therapy), person with intersex variations, genderqueer and person having such socio-cultural identities as kinner, hijra, aravani and jogta.

## CHAPTER II

## PROHIBITION AGAINST DISCRIMINATION

Prohibition against discrimination.

3. No person or establishment shall discriminate against a transgender person on any of the following grounds, namely:—

(a) the denial, or discontinuation of, or unfair treatment in, educational establishments and services thereof;

(b) the unfair treatment in, or in relation to, employment or occupation;

(c) the denial of, or termination from, employment or occupation;

(d) the denial or discontinuation of, or unfair treatment in, healthcare services;

(e) the denial or discontinuation of, or unfair treatment with regard to, access to, or provision or enjoyment or use of any goods, accommodation, service, facility, benefit, privilege or opportunity dedicated to the use of the general public or customarily available to the public;

(f) the denial or discontinuation of, or unfair treatment with regard to the right of movement;

(ஒ) ‘‘மாற்றுப்பாலினத்தவர்’’ என்பது, எந்த ஒரு நபருடைய பால்வகை பிறப்பின்போது அந்த நபருடன் வந்தமைந்த பாலினத்துடன் ஒத்தில்லையோ அந்த நபர் என்று பொருள்படும்; மற்றும் மாற்றுப் பாலின ஆண் அல்லது மாற்றுப் பாலினப் பெண் (அத்தகைய நபர் பால்வகை மாற்று அறுவை சிகிச்சையோ அல்லது இயக்குநீர் (ஹார்மோன்) நோய் நீக்கல் சிகிச்சையோ அல்லது கதிர்வீச்சு நோய் நீக்கல் சிகிச்சையோ அல்லது அதுபோன்ற பிற சிகிச்சை செய்திருந்தாலும் இல்லாவிடினும்) பாலிடை மாறுபாடுகள், பால்வகை வழக்கத்திற்கு மாறான இயல்பு மற்றும் கின்னர், ஹிஜ்ரா, அரவாணி மற்றும் ஜோக்தா என அத்தகைய சமுதாயப் பண்பாட்டுத் தனி அடையாளங்கள் உடைய நபர் என்று பொருள்படும்.

## அத்தியாயம் II

## வேற்றுமைகாட்டுவதற்கு எதிராகத் தடையுறுத்தம்

**3.** எந்த நபரும் அல்லது நிறுவனமும், பின்வரும் காரணங்களில் எதற்காகவும் மாற்றுப்பாலினத்தவர் ஒருவருக்கு எதிராக வேற்றுமைகாட்டுதல் ஆகாது, அவையாவன:– வேற்றுமை காட்டுவதற்கு எதிராகத் தடையுறுத்தம்.

(அ) கல்வி நிறுவனங்களுக்கும் அவற்றின் பணிகளுக்கும் ஏற்க மறுத்தல், அல்லது நிறுத்திவிடுதல் அல்லது அவற்றில் சரிசமமின்றி நடத்தப்படுதல்;

(ஆ) வேலையமர்த்தத்தில் அல்லது வாழ்தொழிலில் அல்லது அதன் தொடர்பானவற்றில் சரிசமமின்றி நடத்தப்படுதல்;

(இ) வேலையமர்த்தத்திற்கு அல்லது வாழ்தொழிலுக்கு ஏற்கமறுத்தல் அல்லது அதிலிருந்து நீக்கிவிடுதல்;

(ஈ) உடல்நலப் பாதுகாப்புச் சேவைகள் மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல், அதில் சரிசமமின்றி நடத்தப்படுதல்;

(உ) பொதுமக்கள் பயன்பாட்டிற்கென அர்ப்பணிக்கப்பட்ட அல்லது வழக்க முறையில் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சரக்குகள், இடவசதி, சேவை, வசதி, நலப்பயன், சிறப்புரிமை அல்லது வாய்ப்புநலம் எதனையும் அணுகிப்பெறுதல் அல்லது அதனை வழங்கப் பெறுதல் அல்லது நுகர்தல் அல்லது பயன்படுத்துதல், பொறுத்து மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல் அல்லது அவற்றில் சரிசமமின்றி நடத்தப்படுதல்;

(ஊ) எங்கும் சென்று வருவதற்கான உரிமை மறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல் அல்லது சரிசமமின்றி நடத்தப்படுதல்;

(g) the denial or discontinuation of, or unfair treatment with regard to the right to reside, purchase, rent, or otherwise occupy any property;

(h) the denial or discontinuation of, or unfair treatment in, the opportunity to stand for or hold public or private office; and

(i) the denial of access to, removal from, or unfair treatment in, Government or private establishment in whose care or custody a transgender person may be.

## CHAPTER III

## RECOGNITION OF IDENTITY OF TRANSGENDER PERSONS

Recognition of identity of transgender person.

**4.** (1) A transgender person shall have a right to be recognised as such, in accordance with the provisions of this Act.

(2) A person recognised as transgender under sub-section (1) shall have a right to self-perceived gender identity.

Application for certificate of identity.

**5.** A transgender person may make an application to the District Magistrate for issuing a certificate of identity as a transgender person, in such form and manner, and accompanied with such documents, as may be prescribed:

Provided that in the case of a minor child, such application shall be made by a parent or guardian of such child.

Issue of certificate of identity.

**6.** (1) The District Magistrate shall issue to the applicant under section 5, a certificate of identity as transgender person after following such procedure and in such form and manner, within such time, as may be prescribed indicating the gender of such person as transgender.

(2) The gender of transgender person shall be recorded in all official documents in accordance with certificate issued under sub-section (1).

(எ) சொத்து எதிலும் குடியிருப்பதற்கான, அதனை விலைக்கு வாங்குவதற்கான, வாடகைக்கு எடுப்பதற்கான அல்லது பிறவாறாக அதில் குடியிருப்பதற்கான உரிமைமறுக்கப்படுதல் அல்லது நிறுத்தப்படுதல் அல்லது அதில் சரிசமமின்றி நடத்தப்படுதல்;

(ஏ) பொதுத்துறை அல்லது தனியார்த்துறைப் பதவிக்கான தேர்தலில் நிற்கும் அல்லது பதவிவகிக்கும் வாய்ப்பு மறுக்கப்படுதல் அல்லது அதிலிருந்து நிறுத்தப்படுதல், அல்லது அதில் சரிசமமின்றி நடத்தப்படுதல்; மற்றும்

(ஐ) எந்த அரசு அல்லது தனியார் நிறுவனத்தின் பாதுகாப்பில் அல்லது பொறுப்பில் மாற்றுப்பாலினத்தவர் இருக்கக் கூடுமோ அந்த அரசு அல்லது தனியார் நிறுவனத்தை அணுகுவதற்கு, மறுக்கப்படுதல் அல்லது அதிலிருந்து விலக்கப்படுதல், அல்லது அதில் சரிசமமின்றி நடத்தப்படுதல்.

## அத்தியாயம் III

## மாற்றுப்பாலினத்தவரின் பாலின அடையாளத்தை ஏற்பளித்தல்

மாற்றுப்பாலினத்–தவரின் பாலின அடையாளத்தை ஏற்பளித்தல்.

**4. (1)** மாற்றுப்பாலினத்தவர் ஒருவர் இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி, அவ்வாறாக ஏற்பளிக்கப் பெறுவதற்கு உரிமை உடையவர் ஆவார்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி மாற்றுப்பாலினத்தவர் என ஏற்பளிக்கப்பட்ட நபர் ஒருவர் தானே மனதால் உணர்ந்துகொண்ட பாலின அடையாளத்துக்கான உரிமை ஒன்றைக் கொண்டிருப்பார்.

பாலின அடையாள உறுதிச்சான்றுக்கான விண்ணப்பம்.

**5.** மாற்றுப்பாலினத்தவர் ஒருவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்திலும் முறையிலும், மற்றும் அத்தகைய ஆவணங்களைச் சேர்த்தனுப்பி, ஒரு மாற்றுப்பாலினத்தவர் எனப் பாலின அடையாள உறுதிச்சான்று வழங்குவதற்காக மாவட்ட நடுவருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:

**வரம்புரையாக:** உரிமை வயதடையாத சிறார் ஒருவர் நேர்வில், அத்தகைய விண்ணப்பம், அத்தகைய சிறாரின் பெற்றோர் அல்லது காப்பாளர் ஒருவரால் செய்யப்படுதல் வேண்டும்.

பாலின அடையாள உறுதிச்சான்று வழங்குதல்.

**6. (1)** மாவட்ட நடுவர், 5 ஆம் பிரிவின்படி, விண்ணப்பதாரருக்கு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நெறிமுறையைப் பின்பற்றிய பின்பு, அத்தகைய வடிவத்திலும் முறையிலும், அத்தகைய காலத்திற்குள், அத்தகைய நபரின் பாலினம் மாற்றுப்பாலினத்தவர் எனச் சுட்டிக்காட்டி, மாற்றுப்பாலினத்தவர் எனப் பாலின அடையாள உறுதிச்சான்று ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(2) மாற்றுப்பாலினத்தவரின் பாலினம், (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட உறுதிச்சான்றிற்கு இணங்க அனைத்து அலுவல்முறை ஆவணங்களிலும் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) A certificate issued to a person under sub-section (1) shall confer rights and be a proof of recognition of his identity as a transgender person.

Change in gender.

**7.** **(**1) After the issue of a certificate under sub-section (1) of section 6, if a transgender person undergoes surgery to change gender either as a male or female, such person may make an application, along with a certificate issued to that effect by the Medical Superintendent or Chief Medical Officer of the medical institution in which that person has undergone surgery, to the District Magistrate for revised certificate, in such form and manner as may be prescribed.

(2) The District Magistrate shall, on receipt of an application along with the certificate issued by the Medical Superintendent or Chief Medical Officer, and on being satisfied with the correctness of such certificate, issue a certificate indicating change in gender in such form and manner and within such time, as may be prescribed.

(3) The person who has been issued a certificate of identity under section 6 or a revised certificate under sub-section (2) shall be entitled to change the first name in the birth certificate and all other official documents relating to the identity of such person:

Provided that such change in gender and the issue of revised certificate under sub-section (*2*) shall not affect the rights and entitlements of such person under this Act.

## CHAPTER IV

## WELFARE MEASURES BY GOVERMENT

Obligation of appropriate Government.

**8.** **(**1) The appropriate Government shall take steps to secure full and effective participation of transgender persons and their inclusion in society.

**(3). (1)** ஆம் உட்பிரிவின்படி ஒரு நபருக்கு வழங்கப்படும் ஓர் உறுதிச்சான்று அவர் ஒரு மாற்றுப்பாலினத்தவர் என பாலின அடையாளத்துக்கான உரிமைகளை அளிப்பதற்கும் அதனை ஏற்பளிப்பதற்கான ஒரு மெய்ப்பிப்பாகவும் இருத்தல் வேண்டும்.

பாலினத்தில் மாற்றம்.

**7. (1) 6** ஆம் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவின்படி ஓர் உறுதிச்சான்றை வழங்கிய பின்பு, மாற்றுப்பாலினத்தவர் ஓர் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பால்வகையை மாற்றுவதற்கு அறுவை சிகிச்சையை செய்துகொள்வாராயின், அத்தகைய நபர் அறுவை சிகிச்சையை எந்த மருத்துவ நிறுவனத்தில் செய்துகொண்டாரோ அந்த மருத்துவ நிறுவனத்தின் மருத்துவக் கண்காணிப்பாளராலோ அல்லது தலைமை மருத்துவ அலுவலராலோ அந்தப் பொருண்மையுடன் வழங்கப்பட்ட ஓர் உறுதிச்சான்றுடன் சேர்த்து அந்த நபர் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்திலும் முறையிலும், திருத்தியமைக்கப்பட்ட உறுதிச்சான்றுக்காக மாவட்ட நடுவருக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

**(2)** மாவட்ட நடுவர், மருத்துவக் கண்காணிப்பாளராலோ அல்லது தலைமை மருத்துவ அலுவலராலோ வழங்கப்பட்ட உறுதிச்சான்றுடன் சேர்த்து விண்ணப்பம் ஒன்றைப் பெறுவதன் பேரில், மேலும் அத்தகைய உறுதிச்சான்றின் மெய்மை குறித்து தெளிவுறக்காண்பதன் பேரில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்திலும் முறையிலும் மற்றும் அத்தகைய காலத்திற்குள் பாலினத்தில் மாற்றத்தைச் சுட்டிக்காட்டி உறுதிச்சான்று ஒன்றை வழங்குதல் வேண்டும்.

**(3) . 6** ஆம் பிரிவின்படி பாலின அடையாள உறுதிச்சான்று ஒன்றோ அல்லது **(2)** ஆம் உட்பிரிவின்படி திருத்தியமைக்கப்பட்ட உறுதிச்சான்று ஒன்றோ வழங்கப்பட்டிருக்கும் நபர் ஒருவர், பிறப்பு உறுதிச்சான்றிலும் மற்றும் அத்தகைய நபருக்குள்ள பாலின அடையாளம் தொடர்பான அனைத்துப் பிற அலுவல்முறை ஆவணங்களிலும் முதலாவதான பெயரை மாற்றிக்கொள்வதற்கு உரிமைக்கொண்டவர் ஆவார்:

**வரம்புரையாக:** பாலினத்தில் அத்தகைய மாற்றமும் **(2)** ஆம் உட்பிரிவின்படி திருத்தியமைக்கப்பட்ட உறுதிச்சான்று வழங்குவதும் இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நபருக்குள்ள உரிமைகளுக்கும் உரிமையுடைய உடைமைகளுக்கும் பாதிப்பாக இருத்தல் ஆகாது.

## அத்தியாயம் IV

## அரசால் எடுக்கப்படும் நலப்பாட்டு நடவடிக்கைகள்

உரிய அரசுக்குள்ள கடமைப்பாடு.

**8. (1)** உரிய அரசு, மாற்றுப்பாலினத்தவர் சமுதாயத்தில் முழுமையாகவும் பயன்முனைப்பாகவும் பங்குகொள்வதை உறுதி செய்வதற்கும் அவர்களை உள்ளடக்கிக் கொள்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(2) The appropriate Government shall take such welfare measures as may be prescribed to protect the rights and interests of transgender persons, and facilitate their access to welfare schemes framed by that Government.

(3) The appropriate Government shall formulate welfare schemes and programmes which are transgender sensitive, non-stigmatising and non-discriminatory.

(4) The appropriate Government shall take steps for the rescue, protection and rehabilitation of transgender persons to address the needs of such persons.

(5) The appropriate Government shall take appropriate measures to promote and protect the right of transgender persons to participate in cultural and recreational activities.

## CHAPTER V

## OBLIGATION OF ESTABLISHMENTS AND OTHER PERSONS

Non-discrimination in employment.

**9.** No establishment shall discriminate against any transgender person in any matter relating to employment including, but not limited to, recruitment, promotion and other related issues.

Obligations of establishments.

**10.** Every establishment shall ensure compliance with the provisions of this Act and provide such facilities to transgender persons as may be prescribed.

Grievance redressal mechanism.

**11.** Every establishment shall designate a person to be a complaint officer to deal with the complaints relating to violation of the provisions of this Act.

Right of residence.

**12.** (1) No child shall be separated from parents or immediate family on the ground of being a transgender, except on an order of a competent court, in the interest of such child.

(2) Every transgender person shall have—

(2) உரிய அரசு, மாற்றுப்பாலினத்தவர் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதற்கு, அந்த அரசால் வனையப்படும் நலப்பாட்டுத் திட்டங்களை அவர்கள் கைக்கொள்வதற்கான வாய்ப்பை ஊக்குவித்து ஆதரவளிப்பதற்கும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நலப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(3) உரிய அரசு, மாற்றுப்பாலினத்தவர் உணர்த்திறமுடைய, மாசுவடுவுறச் செய்யாத மற்றும் வேற்றுமைகாட்டாதவையான நலப்பாட்டுத் திட்டங்களையும் செயல் திட்டங்களையும் வகுத்தமைத்தல் வேண்டும்.

(4) உரிய அரசு, மாற்றுப்பாலினத்தவரின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அத்தகைய நபர்களின் மீட்புக்கும், பாதுகாப்புக்கும் மற்றும் மறுவாழ்வளிப்புக்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(5) உரிய அரசு, மாற்றுப்பாலினத்தவர், பண்பாட்டு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்குள்ள உரிமையை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

## நிறுவனங்களுக்கும் பிற நபர்களுக்குமுள்ள கடமைப்பாடு

வேலையமர்த்தத்தில் வேற்றுமை காட்டாமை.

**9.** எந்தவொரு நிறுவனமும் வேலைக்கமர்த்துவது தொடர்பான பொருட்பாடு எதிலும், ஆளெடுத்தல், பதவி உயர்வு மற்றும் தொடர்புடைய பிற பொருட்பாடுகள் உள்ளடங்கலாக, ஆனால் இதனை வரம்பெனக்கொள்ளாமல் மாற்றுபாலினத்தவர் எவருக்கும் எதிராக வேற்றுமைகாட்டுதல் ஆகாது.

நிறுவனங்களுக்குள்ள கடமைப்பாடுகள்.

**10.** ஒவ்வொரு நிறுவனமும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு இணங்கி நடப்பதை உறுதிசெய்வதும் மாற்றுப்பாலினத்தவருக்கு வகுத்துரைக்கப்படலாகிறவாறு அத்தகைய வசதிகளை வழங்குவதும் வேண்டும்.

குறைதீர்த்தல் இயங்கமைவு.

**11.** ஒவ்வொரு நிறுவனமும் இந்தச் சட்டத்தின் வகையங்களை மீறுவது தொடர்பான முறையீடுகளைக் கையாளுவதற்கு முறையீட்டு அலுவலராக இருப்பதற்கு ஒரு நபரைப் பெயர் குறித்தமர்த்துதல் வேண்டும்.

உறைவிடத்திற்கான உரிமை.

**12.** (1) எந்தவொரு சிறாரும், அந்தச் சிறாரின் நலன் கருதி, தகுதிறமுள்ள நீதிமன்றம் ஒன்றின், ஓர் ஆணையின் பேரில் அல்லாமல், ஒரு மாற்றுப்பாலினத்தவராக இருப்பதை காரணங்காட்டிப் பெற்றோரிடமிருந்தோ அல்லது மிக நெருங்கிய குடும்பத்தினரிடம் இருந்தோ தனியாகப் பிரித்துவைக்கப்படுதல் ஆகாது.

(2) ஒவ்வொரு மாற்றுப்பாலினத்தவரும்–

(a) a right to reside in the household where parent or immediate family members reside;

(b) a right not to be excluded from such household or any part thereof; and

(c) a right to enjoy and use the facilities of such household in a non-discriminatory manner.

(3) Where any parent or a member of his immediate family is unable to take care of a transgender, the competent court shall by an order direct such person to be placed in rehabilitation centre.

## CHAPTER VI

## EDUCATION, SOCIAL SECURITY AND HEALTH OF TRANSGENDER PERSONS

Obligation of educational institutions to provide inclusive education to transgender persons.

**13.** Every educational institution funded or recognised by the appropriate Government shall provide inclusive education and opportunities for sports, recreation and leisure activities to transgender persons without discrimination on an equal basis with others.

Vocational training and self-employment.

**14.** The appropriate Government shall formulate welfare schemes and programmes to facilitate and support livelihood for transgender persons including their vocational training and self-employment.

Healthcare facilities.

**15.** The appropriate Government shall take the following measures in relation to transgender persons, namely: —

(a) to set up separate human immunodeficiency virus Sero-surveillance Centres to conduct serosurveillance for such persons in accordance with the guidelines issued by the National AIDS Control Organisation in this behalf;

(b) to provide for medical care facility including sex reassignment surgery and hormonal therapy;

(அ) பெற்றோரோ அல்லது மிக நெருங்கிய குடும்பத்தினரோ குடியிருக்கும் குடும்பஅமைவிடத்தில் குடியிருப்பதற்கு உரிமை உடையவர் ஆவார்;

(ஆ) அத்தகைய குடும்பஅமைவிடத்திலிருந்தோ அல்லது அதன் பகுதி எதிலுமிருந்தோ ஒதுக்கி விலக்கி வைக்கப்படாமல் இருப்பதற்கு உரிமை உடையவர் ஆவார்; மற்றும்

(இ) வேற்றுமைகாட்டப்படாத முறை ஒன்றில் அத்தகைய குடும்பஅமைவிடத்தின் வசதிகளைத் துய்ப்பதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உரிமை உடையவர் ஆவார்.

**(3)** ஒரு மாற்றுப்பாலினத்தவரின் பெற்றோர் எவருமோ அல்லது அவருடைய மிக நெருங்கிய குடும்பத்தினரோ அவரைப் பொறுப்பில் வைத்துக்கொள்வதற்கு இயலாதிருக்கிறவிடத்து, தகுதிறமுள்ள நீதிமன்றம், ஓர் ஆணையின் வழி, அத்தகைய நபர் மறுவாழ்வு மையத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குப் பணித்தல் வேண்டும்.

## அத்தியாயம் VI

## மாற்றுப்பாலினத்தவருக்குக் கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு

மாற்றுப்பாலினத்தவருக்கு உள்ளடக்கிய கல்விக்கு வகைசெய்வதற்கு கல்வி நிறுவனங்களின் கடமைப்பாடு.

**13.** உரிய அரசால் நிதியுதவப்படுகிற அல்லது ஏற்பளிக்கப்பெற்ற கல்வி நிறுவனம் ஒவ்வொன்றும் மாற்றுப்பாலினத்தவருக்குப் பிறருடன் சேர்ந்து ஒரு சமமான அடிப்படையின்பேரில் வேற்றுமைகாட்டப்படாத உள்ளடக்கிய கல்விக்கும் மற்றும் விளையாட்டுகள், பொழுதுபோக்கு மற்றும் ஓய்வு இடைவேளைச் செயல்பாடுகளுக்கான வாய்ப்புகளுக்கு வகை செய்தல் வேண்டும்.

உறுதொழில் பயிற்சி மற்றும் சுயவேலைவாய்ப்பு.

**14.** உரிய அரசு, மாற்றுப்பாலினத்தவருக்கு அவர்களின் உறுதொழில் பயிற்சி மற்றும் சுய வேலைவாய்ப்பு உள்ளடங்கலாக வாழ்க்கைப்பாட்டிற்குத் துணைநின்று ஊக்குவித்து ஆதரவளிப்பதற்கு நலப்பாட்டுத் திட்டங்களையும் செயல்திட்டங்களையும் வகுத்தமைத்தல் வேண்டும்.

நல்வாழ்வு பாதுகாப்பு வசதிகள்.

**15.** உரிய அரசு, மாற்றுப்பாலினத்தவர் பொறுத்துப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும், அவையாவன:-

(அ) இதற்கென தேசிய நோய் ஏமக்காப்பு அழிக்கும் நோய்க் (எய்ட்ஸ்) கட்டுப்பாட்டு அமைப்பினால் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிகளின்படி அத்தகைய நபர்களுக்காக ஊநீர் (சீரோ) அணுக்கக் கண்காணிப்பு நடத்துவதற்காக தனியாக மனித ஏமக்காப்பு குறைபாட்டு நுண்மி ஊநீர் (சீரோ) அணுக்கக் கண்காணிப்பு மையங்களை நிறுவுதல்;

(ஆ) பாலின மாற்று அறுவை சிகிச்சை மற்றும் இயக்குநீர் (ஹார்மோன்) நோய் நீக்கல் சிகிச்சை உள்ளடங்கலான மருத்துவக் காப்பிற்கு வகை செய்தல்;

(c) before and after sex reassignment surgery and hormonal therapy counselling;

(d) bring out a Health Manual related to sex reassignment surgery in accordance with the World Profession Association for Transgender Health guidelines;

(e) review of medical curriculum and research for doctors to address their specific health issues;

(f) to facilitate access to transgender persons in hospitals and other healthcare institutions and centres;

(g) provision for coverage of medical expenses by a comprehensive insurance scheme for Sex Reassignment Surgery, hormonal therapy, laser therapy or any other health issues of transgender persons.

## CHAPTER VII

## NATIONAL COUNCIL FOR TRANGENDER PERSONS

National Council for Transgender Persons.

**16.** **(**1) The Central Government shall by notification constitute a National Council for Transgender Persons to exercise the powers conferred on, and to perform the functions assigned to it, under this Act.

(2) The National Council shall consist of—

(a) the Union Minister in-charge of the Ministry of Social Justice and Empowerment, Chairperson, *ex officio;*

(b) the Minister of State, in-charge of the Ministry of Social Justice and Empowerment in the Government, Vice-Chairperson, *ex officio*;

(c) Secretary to the Government of India in-charge of the Ministry of Social Justice and Empowerment, Member, *ex officio*;

(இ) பாலின மாற்று அறுவை சிகிச்சை மற்றும் இயக்குநீர் (ஹார்மோன்) நோய் நீக்கல் சிகிச்சைக்கு முன்பும் பின்புமான ஆலோசனை;

(ஈ) மாற்றுப்பாலினத்தவர் நல்வாழ்வுக்காக வழிகாட்டு நெறிகளுக்கு இணங்க உலக விழைதொழில் கழகத்தின் பாலின மாற்றுஅறுவை சிகிச்சை தொடர்பாக நல்வாழ்வுக் கையேடு ஒன்றை வெளிக்கொணர்தல்;

(உ) அவர்களுடைய குறிப்பிட்ட உடல்நலப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு மருத்துவர்களுக்கான மருத்துவப் பாடத்திட்ட முறையையும் ஆராய்ச்சியையும் மறுஆய்வு செய்தல்;

(ஊ) மருத்துவமனைகளுக்கும் பிற நலவாழ்வு நிறுவனங்களுக்கும் மையங்களுக்கும் மாற்றுப்பாலினத்தவர் சென்றுவருவதற்கு ஊக்குவித்து ஆதரவளித்தல்;

(எ) மாற்றுப்பாலினத்தவருக்குள்ள பாலின மாற்று அறுவை சிகிச்சை, இயக்குநீர் (ஹார்மோன்) நோய் நீக்கல் சிகிச்சை, கதிர்வீச்சு நோய் நீக்கல் சிகிச்சை அல்லது பிற நல்வாழ்வுப் பிரச்சினைகளுக்கான முழுமையான காப்பீட்டுத் திட்டம் ஒன்றினால் மருத்துவச் செலவுகளை உள்ளடக்குவதற்கு வகை செய்தல்.

## அத்தியாயம் VII

## மாற்றுப்பாலினத்தவருக்கான தேசிய மன்றம்

மாற்றுப்பாலினத்தவருக்கான தேசிய மன்றம்.

**16.(1)** மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, மாற்றுப்பாலினத்தவருக்கான தேசிய மன்றம் ஒன்றை, இந்தச் சட்டத்தின்படி, அதற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், அதற்கு குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளைப் புரிவதற்கும், அமைத்தல் வேண்டும்.

(2) தேசிய மன்றம்—

(அ) சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகத்தின் பொறுப்பைக் கொண்டுள்ள ஒன்றியத்து அமைச்சர், தலைமையர், **பதவிவழி ;**

(ஆ) சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகத்தின் பொறுப்பைக் கொண்டுள்ள இணை அமைச்சர், துணைத் தலைமையர், **பதவிவழி** ;

(இ) சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகத்தின் பொறுப்பைக் கொண்டுள்ள இந்திய அரசுச் செயலாளர், உறுப்பினர், **பதவிவழி ;**

(d) one representative each from the Ministries of Health and Family Welfare, Home Affairs, Housing and Urban Affairs, Minority Affairs, Human Resources Development, Rural Development, Labour and Employment and Departments of Legal Affairs, Pensions and Pensioners Welfare and National Institute for Transforming India Aayog, not below the rank of Joint Secretaries to the Government of India, Members*, ex officio*;

(e) one representative each from the National Human Rights Commission and National Commission for Women, not below the rank of Joint Secretaries to the Government of India, Members, *ex officio*;

(f) representatives of the State Governments and Union territories by rotation, one each from the North, South, East, West and North-East regions, to be nominated by the Central Government, Members, *ex officio*;

(g) five representatives of transgender community, by rotation, from the State Governments and Union territories, one each from the North, South, East, West and North-East regions, to be nominated by the Central Government, Members;

(h) five experts, to represent non-governmental organisations or associations, working for the welfare of transgender persons, to be nominated by the Central Government, Members; and

(i) Joint Secretary to the Government of India in the Ministry of Social Justice and Empowerment dealing with the welfare of the transgender persons, Member Secretary, *ex officio*.

(3) A Member of National Council, other than ex officio member, shall hold office for a term of three years from the date of his nomination.

Functions of Council.

**17.** The National Council shall perform the following functions, namely:**—**

(ஈ) நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், உள்த்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அலுவற்பாடுகள், சிறுபான்மையினர் அலுவற்பாடுகள், மனிதவள மேம்பாடு, ஊரக வளர்ச்சி, அமைச்சகங்கள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் சட்ட அலுவற்பாட்டுத் துறைகள், ஓய்வூதியங்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் நலப்பாடு இந்தியாவின் மாற்றத்திற்கான தேசிய நிறுவன அமைப்பு ஒவ்வொன்றிலிருந்தும் இந்திய அரசு இணைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத ஒரு சார்பாற்றுநர், உறுப்பினர்கள், **பதவிவழி ;**

(உ) தேசிய மனித உரிமைகள் ஆணையம், மற்றும் பெண்களுக்கான தேசிய ஆணையம் ஆகிய ஒவ்வொன்றிலிருந்தும், இந்திய அரசு இணைச் செயலாளர்கள் படிநிலைக்குக் குறையாத, ஒரு சார்பாற்றுநர், உறுப்பினர்கள், **பதவி வழி ;**

(ஊ) வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் வடகிழக்கு மண்டலங்களிலிருந்து ஒவ்வொன்றிலும் ஒருவர் என மாநில அரசுகள் மற்றும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளிலிருந்து சுழற்சி முறையில் மைய அரசால் நியமனம் செய்யப் பெறவேண்டிய சார்பாற்றுநர்கள், உறுப்பினர்கள், **பதவிவழி ;**

(எ) வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மற்றும் வடகிழக்கு மண்டலங்களிலிருந்து ஒவ்வொன்றிலும் ஒருவர் என சுழற்சி முறையில், மாநில அரசுகள் மற்றும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளிலிருந்து, சுழற்சி முறையில் மைய அரசால் நியமனம் செய்யப் பெறவேண்டிய மாற்றுப்பாலினத்தவர் சமுதாயச் சார்பாற்றுநர்கள் ஐவர், உறுப்பினர்கள்;

(ஏ) மாற்றுப்பாலினத்தவர் நலனுக்காக இயங்கிவரும், அரசு சாரா அமைப்புகள் அல்லது கழகங்களைச் சார்பாற்றம் செய்வதற்கு, மைய அரசால் நியமனம் செய்யப் பெறவேண்டிய ஐந்து வல்லுநர்கள், உறுப்பினர்கள்; மற்றும்

(ஐ) மாற்றுப்பாலினத்தவர் நலப்பாட்டை நிருவகிக்கும் சமூகநீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகத்தின் இந்திய அரசு இணைச் செயலாளர், உறுப்பினர்–செயலாளர், **பதவி வழி** ;

ஆகியோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பதவிவழி உறுப்பினர் அல்லாத பிற, தேசிய மன்ற உறுப்பினர் ஒருவர், அவர் நியமனமானத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலஅளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

**17.** தேசிய மன்றம் பின்வரும் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும், அவையாவன:- மன்றத்தின் செயற்பணிகள்.

(a) to advise the Central Government on the formulation of policies, programmes, legislation and projects with respect to transgender persons;

(b) to monitor and evaluate the impact of policies and programmes designed for achieving equality and full participation of transgender persons;

(c) to review and coordinate the activities of all the departments of Government and other Governmental and non-Governmental Organisations which are dealing with matters relating to transgender persons;

(d) to redress the grievances of transgender persons; and

(e) to perform such other functions as may be prescribed by the Central Government.

## CHAPTER VIII

## OFFENCES AND PENALTIES

Offences and penalties.

**18.** Whoever,—

(a) compels or entices a transgender person to indulge in the act of forced or bonded labour other than any compulsory service for public purposes imposed by Government;

(b) denies a transgender person the right of passage to a public place or obstructs such person from using or having access to a public place to which other members have access to or a right to use;

(c) forces or causes a transgender person to leave household, village or other place of residence; and

(அ) மாற்றுப்பாலினத்தவர் பொறுத்து, கொள்கைகள் செயல்திட்டங்கள், சட்டமியற்றுதல் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றை வகுத்தமைப்பதன் மீது மைய அரசிற்கு ஆலோசனை வழங்குதல்;

(ஆ) மாற்றுப்பாலினத்தவர் சமன்மையையும் முழுப்பங்கேற்பையும் எய்திடுவதற்காக வடிவமைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல் திட்டங்களின் தாக்கத்தைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்;

(இ) மாற்றுப்பாலினத்தவர் தொடர்பான பொருட்பாடுகளுடன் ஈடுபாடுடைய அனைத்து அரசுத் துறைகள் மற்றும் பிற அரசு சார் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் செயற்பாடுகளை மறுஆய்வு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்;

(ஈ) மாற்றுப்பாலினத்தவரின் குறைகளைத் தீர்த்துவைத்தல்; மற்றும்

(உ) மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற செயற் பணிகளைப் புரிதல்.

## அத்தியாயம் VIII

## குற்றச் செயல்களும் தண்டனைகளும்

குற்றச் செயல்களும் தண்டனைகளும்.

**18.** (அ) அரசால் விதிக்கப்படும் பொது நலன் நோக்கங்களுக்கான கட்டாயப் பணி எதுவுமாக அல்லாத கட்டாயப்படுத்தி வாங்கும் பிற வேலைமுறை அல்லது கொத்தடிமை வேலைமுறைச் செயல்களில் ஈடுபடும்படி மாற்றுப்பாலினத்தவரைக் கட்டாயப்படுத்துகிறவர் அல்லது ஆவலூட்டித் தூண்டுகிறவர்;

(ஆ) பிற நபர்கள் அணுகும் வாய்ப்பைக் கொண்டிருக்கிற அல்லது பயன்படுத்திக் கொள்வதற்கு உரிமையொன்றைக் கொண்டிருக்கிற ஒரு பொது இடத்தை மாற்றுப்பாலினத்தவருக்கு கடந்து செல்லும் உரிமையை மறுக்கிறவர் அல்லது ஒரு பொது இடத்தைப் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து அல்லது அணுகும் வாய்ப்பைப் பெறுவதிலிருந்து அத்தகைய நபரைத் தடுக்கிறவர்;

(இ) குடும்பஅமைவிடம், கிராமம் அல்லது பிற உறைவிடத்திலிருந்து மாற்றுப்பாலினத்தவரை வெளியேறுமாறு கட்டாயப்படுத்துகிறவர் அல்லது வெளியேறச் செய்கிறவர்; மற்றும்

(d) harms or injures or endangers the life, safety, health or well-being, whether mental or physical, of a transgender person or tends to do acts including causing physical abuse, sexual abuse, verbal and emotional abuse and economic abuse, shall be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to two years and with fine.

## CHAPTER IX

## MISCELLANEOUS

Grants by Central Government.

**19.** The Central Government shall, from time to time, after due appropriation made by Parliament by law in this behalf, credit such sums to the National Council as may be necessary for carrying out the purposes of this Act.

Act not in derogation of any other law.

**20.** The provisions of this Act shall be in addition to, and not in derogation of, any other law for the time being in force.

Protection of action taken in good faith.

**21.** No suit, prosecution or other legal proceeding shall lie against the appropriate Government or any local authority or any officer of the Government in respect of anything which is in good faith done or intended to be done in pursuance of the provisions of this Act and any rules made there under.

Power of appropriate Government to make rules.

**22.** **(**1) The appropriate Government may, subject to the condition of previous publication, by notification, make rules for carrying out the provisions of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:**—**

(ஈ) மாற்றுப்பாலினத்தவருக்கு மனதளவிலோ உடல்நிலையிலோ உயிருக்கு, பாதுகாப்புக்கு, நல்வாழ்வுக்கு அல்லது நன்னிலைக்கு தீங்கிழைக்கிறவர் அல்லது ஊறுபடுத்துகிறவர் அல்லது அபாயம் விளைவிக்கிறவர் அல்லது உடல் ரீதியான தகாத நடத்தையோ, தகாத பாலியல் நடத்தையோ, சொல் மூலமான மற்றும் மனித உணர்வுகளின் தகாத நடத்தையோ மற்றும் பொருளாதார முறைகேடோ விளைவித்தல் உள்ளடங்கலான செயல்களைச் செய்ய முனைகிறவர், எவரொருவரும், ஆறு மாதங்களுக்குக் குறைவாக இருக்கலாகாத ஆனால் இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் காலஅளவு ஒன்றுக்குச் சிறைத் தண்டனை விதித்தும் அபராதம் விதித்தும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் IX

### பல்வகை

**19.** மைய அரசு, அவ்வப்போது, நாடாளுமன்றம் இதற்கென சட்டத்தால் உரிய பண ஒதுக்களிப்பு செய்த பின்பு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையானதாகிறவாறு தேசிய மன்றத்திற்கு அத்தகைய பணத்தொகைகளை வரவு வைத்தல் வேண்டும். மைய அரசால் வழங்கப்படும் மானியங்கள்.

**20.** இந்தச் சட்டத்தின் வகையங்கள் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதற்கும், கூடுதலாக இருத்தல் வேண்டுமேயன்றி, அதனைத் திறக்குறைவுறச் செய்வதாக இருத்தல் ஆகாது. சட்டம் பிற சட்டம் எதனையும் திறக்குறைவு செய்வதில்லை.

**21.** இந்தச் சட்டத்தின் வகையங்களை அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எவற்றையும் ஒட்டி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கருதப்பட்ட எதனையும் பொறுத்து, உரிய அரசுக்கு அல்லது உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதற்கும் அல்லது அரசு அலுவலர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கோ, குற்ற வழக்கோ அல்லது பிற சட்ட நடவடிக்கையோ தொடர்வதற்கு உற்றது ஆகாது. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**22. (1)** உரிய அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளை முன்னதாக வெளியிட வேண்டும் என்ற வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு அறிவிக்கை வாயிலாகச் செய்யலாம். விதிகள் செய்வதற்கு உரிய அரசுக்குள்ள அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும் அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அவையாவன:-

(a) the form and manner in which an application shall be made under section 5;

(b) the procedure, form and manner and the period within which a certificate of identity is issued under sub-section (1) of section 6;

(c) the form and manner in which an application shall be made under sub-section (1) of section 7;

(d) the form, period and manner for issuing revised certificate under sub-section (2) of section 7;

(e) welfare measures to be provided under sub-section (2) of section 8;

(f) facilities to be provided under section 10;

(g) other functions of the National Council under clause (e) of section 17; and

(h) any other matter which is required to be or may be prescribed.

(3) Every rule made by the Central Government under sub-section (1), shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

(அ) 5 ஆம் பிரிவின்படி செய்யப்பட வேண்டிய விண்ணப்பத்தின் வடிவமும் முறையும்;

(ஆ) 6 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி உறுதிச் சான்று வழங்கப்படுவதற்கான நெறிமுறை, வடிவம் மற்றும் முறை மற்றும் எந்தக் காலஅளவிற்குள் வழங்கப்பட வேண்டும் என்பது;

(இ) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி செய்யப்படவேண்டிய விண்ணப்பத்தின் வடிவமும் முறையும்;

(ஈ) 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி திருத்தியமைக்கப்பட்ட உறுதிச் சான்று வழங்குவதற்கான வடிவம், காலஅளவு மற்றும் முறை;

(உ) 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி வகைசெய்யப்பட வேண்டிய நலப்பாட்டு நடவடிக்கைகள்;

(ஊ) 10 ஆம் பிரிவின்படி வகைசெய்யப்பட வேண்டிய வசதிகள்;

(எ) 17 ஆம் பிரிவின் (உ) கூறின்படி தேசிய மன்றத்தின் பிற செயற்பணிகள்; மற்றும்

(ஏ) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும்.

(3). (1) ஆம் உட்பிரிவின்படி மைய அரசால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது முப்பது நாட்கள் கொண்ட ஒரு மொத்தக் காலஅளவுக்கு ஒரு கூட்டத்தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில் அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும், அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; மற்றும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

(4) Every rule made by the State Government under sub-section (1), shall be laid, as soon as may be after it is made, before each House of the State Legislature where it consists of two Houses, or where such legislature consists of one House, before that House.

Power to remove difficulties.

**23.** **(**1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order published in the Official Gazette, make such provisions, not inconsistent with the provisions of this Act as appear to it to be necessary or expedient for removing the difficulty:

Provided that no such order shall be made after the expiry of the period of two years from the date of commencement of this Act.

(2) Every order made under this section shall, as soon as may be after it is made, be laid before each House of Parliament.

**(4). (1)** ஆம் உட்பிரிவின்படி மாநில அரசால் செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பின்பு கூடிய விரைவில் மாநிலச் சட்டமன்றம் ஈரவைகளைக் கொண்டிருக்கிறவிடத்து அந்த அவை ஒவ்வொன்றின் முன்பும், அல்லது அத்தகைய சட்ட மன்றம் ஓரவையைக் கொண்டிருக்கிறவிடத்து, அந்த அவை முன்பு, வைக்கப்படுதல் வேண்டும்.

**23. (1)** இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணையின் வழி, இடர்ப்பாட்டினை அகற்றுவதற்காக அதற்குத் தேவையென அல்லது உகந்ததென தோன்றுகிற , இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் முரண்படாத அத்தகைய வகையங்களைச் செய்யலாம்:- இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் காலஅளவு கழிவுற்ற பின்பு பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

**(2)** இந்தப் பிரிவின்படி செய்யப்படும் விதி ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட பின்பு கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

<u>குறிப்புகள்</u>:

குறிப்புகள்:

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்
சென்னை.